பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 19] சென்னை: மார்கழி 3 (18—12—71) சனி வெளியூர்: மார்கழி 4 (19—12—71) ஞாயிறு [இதழ்: 156

சுதந்தர வீரர்கட்கு உதவி

மத்திய அரசு முடிவு

புதுடில்லி, டிச. 18—

"சுதந்தரப் போராட்ட வீரர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று மக்களவையில் உள்துறைத் துணை அமைச்சர் தெரிவித்தார்.

வைகை வெள்ளம்-- உடனடி நடவடிக்கை

மீட்புப் பணிக்குக் கொச்சியிலிருந்து ஹெலிகாப்டர் விரைந்தது

நீரில் மூழ்கி இறந்த தீயணைப்பு வீரர் குடும்பத்துக்கு ரூ. 5000 தரப்பட்டது

விடிழந்தவர்களுக்கு உடனடியாக உதவித் தொகை--உணவு--இருப்பிடம் வழங்க ஏற்பாடு

மீட்கப்பட்டோர்--உயிரிழந்தோர் எண்ணிக்கை -- சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் விளக்கம்

சென்னை, டிச. 18—

"மதுரை வைகையாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களில் 30 பேர் மீட்கப்பட்டுவிட்டனர்; இன்னும் 7 பேர் மீட்கப்பட வேண்டும்; அவர்களும் இன்று மாலைக்குள் மீட்கப்பட்டுவிடுவார்கள்; மீட்புப் பணிக்கென கொச்சியிலிருந்து ஹெலிகாப்டர் விமானம் தருவிக்கப்பட்டுள்ளது.

"வெள்ளத்தால் வீடிழந்த குடும்பங்களுக்கு உடனடியாக உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது; அவர்களுக்குப் பள்ளிக்கூடங்களில் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டு -- உணவும் அளிக்கப்பட்டு வருகிறது.

"மீட்புப் பணியில் ஈடுபட்டபோது நீரில் மூழ்கி மரணமடைந்த தீயணைப்புப் படை வீரர் குழந்தைவேலுவின் குடும்பத்துக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 5 000 வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது."

இத்தகவல்களை இன்று சட்டப் பேரவையில், முதல்வர் கலைஞர் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"வெள்ளம் பெருகும் என்று நம்பப்படுவதால், செல்லூர்—மாடக்குளம் கண்மாய்களின் கரைகள் உடனடியாகப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

"வைகை வெள்ளத்தால் 7 பேர் இறந்திதாகவும், 200 குடும்பங்கள் வீடிழந்துள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

"இம்மாதம் 16-ந் தேதி இரவு வைகையில் வெள்ளம் திறந்து விடப்படவிருக்கும் செய்தியை முன்கூட்டியே அதிகாரிகள், குடிசை வாசிகளுக்கு அறிவித்து எச்சரிக்கை செய்திருந்தும், குடிசை வாசிகள் அஜாக்கிரதையாக இருந்ததாலேயே பல குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன."

சோழவந்தான் நகராட்சியாகும்

சென்னை, டிச. 18—

"மதுரை மாவட்டம் சோழவந்தான் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது"

என்று சட்டப் பேரவையில் கல்வி-- உள்ளாட்சி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

துணைக்கண்ட அமைதி-- குலைப்பதில் ஈடுபடாதீர்

உலக நாடுகளுக்கு இரஷ்யா வேண்டுகோள்

புதுடில்லி, டிச. 18—

இந்தியத் துணைக்கண்டத்தில் சுமூலமான நடவடிக்கைகளைக் குலைக்கக்கூடிய நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்குமாறு சோவியத் இரஷ்யா, உலக நாடுகட்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியாவின் ஒரு சார்பான போர் நிறுத்த முடிவை வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்த இரஷ்யா, இந்தியாவின் முடிவை ஏற்றுப் போரை நிறுத்தப் பாகிஸ்தான் ஒப்புக்கொண்டதற்கும் திருப்தி தெரிவித்துள்ளது.

போர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகட்கு அரசியல் ரீதியான தீர்வு காணவும், சண்டையை அடியோடு நிறுத்த முயற்சிகளை மேற்கொள்ளவும் இரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

வங்காள தேசத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க வழி பிறந்திருப்பது குறித்து இரஷ்யா மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

கல்பாக்கம் அணுமின்சார நிலையம்

1975-ல் உற்பத்தி துவங்கும்

சென்னை, டிச. 18—

"கல்பாக்கம் அணுமின்சார நிலையத்தின் முதல் பிரிவு 1975 நவம்பரில் உற்பத்தி துவங்கும்; 1976 மார்ச் மாதவாக்கில் வியாபார ரீதியில் உற்பத்தி செய்யப்படும்.

"இரண்டாவது பிரிவைத் துவக்குவதற்கும் மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. இந்த இரண்டாவது பிரிவு 1976-க்குள் அமைக்கப்பட்டுவிடும்."

இத்தகவல், இன்று சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது தரப்பட்டது.

அரசியல் தியாகிகளுக்கு வீடு

சென்னை, டிச 18—

"சொந்த வீடு இல்லாத அரசியல் தியாகிகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பது பற்றி அரசு யோசித்து வருகிறது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி நேரத்தில் முதல்வர் கலைஞர் தெரிவித்தார்.

நெல் -- அரிசி நடமாட்டக் கட்டுப்பாடு

சென்னை, டிச. 18—

நெல் -- அரிசி நடமாட்டக் கட்டுப்பாடு தென் ஆற்காடு -- வட ஆற்காடு மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

சீனாவின் விஷமப் பேச்சு

கண்டித்து இந்திய--சோவியத் தூதுவர் வெளிநடப்பு

பீகிங், டிச. 18—

கம்யூனிஸ்டுச் சீனா இங்கு அளித்த அரசாங்க விருந்துக் கூட்டத்திலிருந்து இந்தியத் தூதரும் -- சோவியத் தூதரும் மற்றும் 6 கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தூதர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

இவ்விருந்துக்கூட்டத்தில் தலைமையமைச்சர் சூ-யென்-லாய் பேசுகையில், பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ஆக்கிரமிப்பு நடத்தியதாகக் கூறி அதற்கு மாஸ்கோ ஆதரவு அளித்ததாகத் தாக்கியபோது 8 நாடுகளின் தூதர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

"கிழக்குப் பாகிஸ்தான் வீழ்ச்சியானது, தெற்கு ஆசிய துணைக் கண்டத்தில், இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் தோல்விக்காக இடைவிடா போராட்டத்துக்கான துவக்க முனை" என்று சூ-என்-லாய் கூறினாராம்.

"சோஷலிச ஏதேச்சாதிகாரம் (இரஷ்யா) இந்தியா ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு ஆதரவு அளித்தது" என்றும் அவர் கூறினாராம்.

மீண்டும் இந்தியாவுக்கு உதவி

அமெரிக்கா பரிசீலிக்கிறதாம்

இந்தியா -- பாகிஸ்தான் போர் மூண்டதையடுத்து இந்தியாவுக்கு அளித்துவந்த பொருளாதார உதவியை அமெரிக்க அரசு நிறுத்திவிட்டது தெரிந்ததே.

இப்போது அந்த உதவியை மீண்டும் அளிப்பது குறித்து அமெரிக்க அரசு பரிசீலித்து வருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

தளபதியின் வீரத் தியாகம்

உதாப்பூர், டிச. 18—

முன்னுவர் தாவி பகுதியில் நடைபெற்ற நேரடி மோதல் ஒன்றில் தமது துருப்புக்களை விட்டுப் பிரியாமல் அவர்களுடன் கடைசி வரை இருந்து வீர மரணமடைந்திருக்கிறார் -- இந்திய இராணுவத் தளபதி (மேஜர்) ஒருவர்.

போர்க்களத்திற்கு இந்திய வீரர்களை நடத்திச் சென்ற மேஜர், தன் வீரர்களோடு சேர்ந்து எதிரிப் படையினரைத் தாக்கினர்.

போரின்போது அவர் படுகாயமடைந்தார்; இதனால், அவரை முகாமுக்கு அனுப்பிவிடப் போர் வீரர்கள் முன்வந்தனர்; ஆனால் அவர், அங்கிருந்து நகர மறுத்துவிட்டு, 'உங்களோடு வாழ்ந்தேன் -- எல்லையில் உங்களோடு இறப்பேன்' என்று கூறி, தொடர்ந்து போரில் ஈடுபட்டார்.

அந்த மேஜரும் -- அவரது படையினரும் இறுதி மூச்சுவரை போராடியே உயிரிழந்த பின்னர்தான் எதிரிகள், முனவர் தாவி ஆற்றின் மேற்கு முனையில் உள்ள இந்திய முகாமைக் கைப்பற்ற முடிந்தது.

பணி முடிந்துவிடவில்லை!

சென்னை, டிச. 18—

"போர் அறவே முடிந்துவிட்டதாக நாம் எண்ணிக்கொள்ளக் கூடாது; போரின் விளைவுகளை எதிர்த்து நாம் ஒரு போர் நடத்த வேண்டியிருக்கிறது.

"இதற்கிடையே முஜிபுர் ரகிமானுடைய விடுதலை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

"தொடர்ந்து இந்தியப் பாதுகாப்புக்கு நாம் அனைவரும் ஓரணியில் நின்றிட வேண்டும் எனபதை வெற்றிக் களிப்பில் ஆழ்ந்திருக்கும் இந்த நேரத்தில் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்."

--முதலமைச்சர் கலைஞர்

பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு அளித்த செய்தி

இருட்டடிப்பு நீக்கம்

புதுடில்லி, டிச. 18—

இந்தியா -- பாகிஸ்தான் போர் நெருக்கடியையொட்டி அறிவிக்கப்பட்ட இருட்டடிப்புக் கட்டுப்பாட்டுத் திட்டம், இன்று மாலை முதல் அகற்றப்படுகிறது.

நாட்டுப் பாதுகாப்பு நிதி

சென்னை, டிச. 18—

நாட்டுப் பாதுகாப்பு நிதிக்குத் தமிழக முதலவரிடம் நேற்று வரை மொத்தம் ரூ. 2,19,168 வந்து சேர்ந்துள்ளது.

சிம்சன் தொழிலாளர்களிடை ஏற்பட்ட மோதல்

49 பேருக்குக் காயம் -- ரூ. 1.50 இலட்சம் பொருட்சேதம்

சென்னை, டிச. 18 –

"செம்பியத்தில் உள்ள சிம்சன் தொழிற்சாலையில் ஏற்பட்ட மோதலின் விளைவாக 49 தொழிலாளர்கள் காயமடைந்தனர்"

என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் கலைஞர் தெரிவித்தார்; அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"இந்த மோதல்களினால் ரூ. 1.50 இலட்சம் மதிப்புள்ள பொருட்சேதம் ஏற்பட்டது.

"செம்பியத்திலும், சென்னை அண்ணா சாலையிலுள்ள சிம்சன் தொழிற்சாலைகளில் பலத்த போலீசுப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது."

இந்தியா--பாகிஸ்தான் போர் முடிவு

[✶]

உலக நெருக்கடி தவிர்க்கப்பட்டது

இந்தியாவின் நேர்மைக்கு--இராசதந்திரத்துக்கு உலகத்தின் பாராட்டு

புதுடில்லி, டிச. 18—

கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று வந்த இந்தியா--பாகிஸ்தான் போர் நேற்று இரவு 8-மணியுடன் முடிவுற்றது.

இந்தியா தன்னிச்சையாக நேற்று இரவு 8-மணிக்குப் போரை நிறுத்துவதாக அறிவித்ததை ஏற்றுக்கொண்டு பாகிஸ்தானும், போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டது.

இந்தியாவின் முப்படைத் தளபதிகளும் ஏற்கனவே இந்தியப் போர் வீரர்களுக்கு உவித்தாக்குதலில் ஈடுபட வேண்டாமென் றும், ஆனால் எச்சரிக்கையுடன் இருந்து எதிரியின் தாக்குதலை முறியடிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தனர்.

நேற்று 3-30 மணிக்குப் பாகிஸ்தான் போர் நிறுத்தத்துக்குத் தனது ஒப்புதலை அறிவித்தது.

போர் நிறுத்தத்தை ஐ. நா. கோரிக்கையின்படி ஏற்றுக்கொள்வதாக யாகியா கான் காரணம் கூறினர்; இதற்கு உடனடியாக இந்தியத் தரப்பின் மறுப்புத் தரப்பட்டது.

இந்தியாவையும் -- பாகிஸ்தானையும் ஒரே மாதிரியாகக் கருதும் ஐ. நா. தீர்மானத்தையும், போர் நிறுத்தத்தை இந்தியா தன்னிச்சையாகவே செய்தது என்பதை உணர மறுக்கும் நிலையையும் இந்தியா ஏற்காது என்பதை அரசு அறிவிப்பாளர் ஒருவர் தெளிவுபடுத்தினர்.

போர் நிறுத்த நேரத்துக்கு ஒரு சில மணி நேரத்திற்குமுன்வரையிலும்கூட, சகர்கார் முனையில் இரு படைகளுக்கும் இடையே கடும் போர் ஒன்று நடைபெற்றது; எதிரிகள் தங்கள் முழும் பலத்தையும் பயன்படுத்தி ஒரு தாக்குதல் முயற்சியை நடத்தினர்; மிகச் சாமர்த்தியமாக இந்தியப் படை அத்தாக்குதலை முறியடித்தது.

சிந்து முனையில் நயாசோர் பகுதியிலும் இதேபோல் ஒரு போர் நடைபெற்றது.

இந்தத் தடவை நடைபெற்ற போரில் இந்தியத் தரப்பில் ஏற்பட்ட ஆட்சேதம் சடுமையானதாகும்; ஆனல், பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட சேதம் இதைவிட பல மடங்காகும்; நேற்று மாலை 6-மணிவரை கிடைத்த தகவல்படி, இரு பகுதிகளிலும் நமது படையினரில் 2,307 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; 6,163 பேர் காயமடைந்தனர்; 2,163 பேர் காணமற் போயிருக்கின்றனர்.

1965-ல் நடைபெற்ற போரில் நமக்கு ஏற்பட்ட சேதம் சுமார் 12,000 பேர் ஆவர்; அப்போது 22 நாள் போர் நடைபெற்றது; ஆனல் இப்போது 13 நாள் நடைபெற்ற போரில் நமக்கு ஏற்பட்ட ஆட்சேதம் 10,633 ஆகும்; இதற்கு இரு முனைகளிலும் போர் நடைபெற்றதே காரணம் என்று கூறப்படுகிறது.

நாம் இழந்த நிலப்பரப்பும் மிகக் கொஞ்சமேயாகும்; முன்னுவார் தாவி என்னும் இடத்தில் சுமார் 50 அல்லது 60 சதுரமைல் பரப்பை நாம் இழந்திருக்கின்றோம்; ஆனல் பாகிஸ்தான் 1,500 சதுரமைல் நிலப்பரப்பை இழந்திருக்கிறது. இதன்றி, எல்லையின் ஏராளமான சாவடிகளையும் இந்தியா கைப்பற்றியிருக்கிறது.

பாகிஸ்தான் இதுவரை 94 போர் விமானங்களை இழந்துள்ளது; அதனிடம் மொத்தம் 285 விமானங்கள் இருப்பதாகக் கருதப்படுகிறது; அதில் மூன்றில் ஒரு பகுதி அழிக்கப்பட்டுவிட்டது.

பாகிஸ்தானிடம் உள்ள டாங்கிகளின் பலம் 1,200 என்று தெரியவருகிறது; அதில் 244 டாங்கிகளை அது இழந்தது -- அதாவது நான்கில் ஒரு பகுதி.

ஆனல் இந்தியாவுக்கு ஏற்பட்ட இழப்பு 45 விமானங்களும் 73 டாங்கிகளும் மட்டுமேதான்; இது நமது படை பலத்தின் மிகச் சிறிய ஓர் சதவிகிதமேயாகும்.

மற்றும் 4 போர்க் கப்பல்கள் -- 2 நீர்மூழ்கிகள் -- 16 பீரங்கிப் படகுகள் -- 12 ஏனைய வண்டிகள் ஆகியவற்றையும் பாகிஸ்தான் இழந்தது; அதாவது பாகிஸ்தான் தமது கடற்படையில் பாதியை இழந்துவிட்டது; இந்தியா ஒரே ஒரு சிறு போர்க் கப்பலை மட்டுமே இழந்திருக்கிறது.

வங்க தேசத்தில் பாகிஸ்தான் துருப்புக்கள் சரணடையும் நிகழ்ச்சி அமைதியாக நடைபெற்றுவருவதாகப் பாதுகாப்பு அமைச்சுத் துறை அறிவிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்; டாக்காவில் மட்டும் 1,000 அதிகாரிகள் உட்பட 24,000 பேர் சரணடைந்துவிட்டதாக அவர் கூறினர்.

இது தொடர்ந்து நடைபெற்று வருவதால் இறுதிக் கணக்கு இனிமேல்தான் தெரியவரும் என்றார் அவர்.

கிழக்குப் பகுதி தளபதி ஜெனரல் அரோரா, வங்க தேசத்தில் 93,000 இராணுவத்தினர் இருந்ததாகத் தெரிவித்தார்.

சரணடைந்தவர்கள் இந்தியாவுக்குக் கொண்டுவரப்படுவர் என்று அரோரா கூறியது குறித்து அந்த அதிகாரி கருத்துத் தெரிவிக்கவில்லை.

வங்க தேசத்தில் பாகிஸ்தான் துருப்புக்கள் சரணடைந்ததும், போர் நிறுத்தத்தை யாகியா கானை ஒப்புக்கொள்ளச் செய்ததும் இந்தியாவின் மாபெரும் வெற்றிகளாகும் என்று உலகெங்கும் கருதப்படுகிறது.

வங்க தேச விடுதலையை விரைவுபடுத்தியதன் மூலம், ஒரு மாபெரும் உலக நெருக்கடியைத் தவிர்த்ததும், தன்னிச்சையாகப் போரை நிறுத்துவதாக அறிவித்து, தனக்கு மண்ணாசையில்லை என்பதை எடுத்துக்காட்டியதும் இந்தியாவின் நேர்மைக்கும் -- இராசதந்திரத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்று உலகம் கருதுகிறது.

சீன -- அமெரிக்க உதவி கிடைக்கும் என்று கருதி, 'போர் -- போர்' என்று அச்சுறுத்திக் கொண்டிருந்த யாகியா கானே இப்போது, 'அது கைகூட இயலாத ஒன்று' என்பதை உணர்ந்துகொண்டிருப்பார். இந்தியாவை வெற்றி கொண்டு பணியவைக்கலாம் என்ற கனவு நிறைவேறவில்லை -- இனிமேலும் நிறைவேறும் என்ற நம்பிக்கையும் இருக்க முடியாது; ஏனெனில் இப்போது பாகிஸ்தான் என்று கூறப்படுவது, எல்லா அம்சங்களிலும் இந்தியாவின் பாதியில் ஒரு பகுதியேயாகும்.

'வங்க தேசம்' என்ற ஒரு புதிய சுதந்தர நாடு உதயமாகியிருப்பது, இந்தியத் துணைக்கண்டத்தின் பலத்தையே ஒரு பெரிய மாறுதலுக்கு உட்படுத்தியிருக்கிறது என்பதைப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் உணராமல் இருக்கமுடியாது.

வீர மரணமடைந்த

தமிழர்கள்

குடும்பங்களுக்குத் தமிழக அரசு உதவி

வேலூர், டிச. 18—

காட்டுப்பாடி கிராமத்தைச் சேர்ந்த அவில்தார் மோசஸ், போளூர் வட்டம் பாலன்கோவில் கிராமத்தைச் சேர்ந்த லான்ஸ் நாயக், சின்னத்தம்பி, ஆரணி வட்டம் மொரப்பன்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த இருசப்பன் ஆகியோர் போரில் வீர மரணம் அடைந்துவிட்டனர்.

அவர்களது குடும்பங்கட்குத் தலா ரூ. 5,000 உதவித் தொகையை அளிக்கத் தமிழக அரசு அனுமதித்துள்ளது.

இந்தத் தகவலை, வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் வி. ராமமூர்த்தி தெரிவித்தார்.

மேற்படி வீரர்களின் குடும்பத்தினரைத் தாமும் பிற அதிகாரிகளும் விரைவில் சென்று சந்தித்து இந்த உதவித் தொகையை வழங்க இருப்பதாக அவர் சொன்னர்.

விருந்துகளுக்குக் கட்டுப்பாடு

புதுடில்லி, டிச. 17—

நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருப்பதை யொட்டி விருந்துகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

திருமண வீட்டில் 100 பேருக்குத்தான் விருந்து கொடுக்க வேண்டும்.

இறந்தவர்களுக்கு நடைபெறும் சடங்குகளிலும் 100 பேருக்கு மேல் உணவளிக்கக் கூடாது.

தேநீர் விருந்துகளில் 50 பேருக்கு விருந்து கொடுக்கலாம்.

உணவுப் பொருள்கள் வீணாவதைத் தடுக்கவே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய அறிக்கையை மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியுள்ளது.

பணமழையில் நனைந்திடக் கணமும் தயங்காதீர்!

கொடுங்கள் ஒரு ரூபாய்! பெறுங்கள் ஒரு லட்சம்!!

ஒரு ரூபாய் கொடுத்து தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கினுல் உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசாகக் கிடைக்கலாம்... எனவே

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு : ஒரு லட்சம் ரூபாய்

5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ.	50,000
10 மூன்ருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ.	50,000
50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1000	ரூ.	50,000
1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100	ரூ.	1,00,000

மொத்தப் பரிசுகள் 4264,
மொத்தப் பரிசுத் தொகை ரூ. **14,00,000***

செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

குலுக்கல் நாள்: 31-12-71

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 264 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2

*4 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைச் சார்பில்...

பாகிஸ்தான் ஆக்ரமிப்பைக் கண்டித்து பாட்டாளிகள் பேரணி

தமிழகம் -- கேரளம் -- மைசூர் -- அந்தமான் -- நிக்கோபார் தீவுகளில் ஊர்வலங்கள் --- பொதுக்கூட்டங்கள்

பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைச் சார்பில் 21-12-71 செவ்வாய் அன்று, 'பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக்குக் கண்டனம்' தொடர்பாக ஊர்வலம் -- பொதுக்கூட்டம் ஆகியன நடைபெறுகிற இடங்களும், ஆங்காங்கு கலந்துகொள்கின்ற சொற்பொழிவாளர்கள் பெயர்களும் அடங்கிய பட்டியல் வருமாறு: -

சென்னை
காஞ்சில் கி. மனோகரன் எம்.பி.
டி. கே. சீனிவாசன் எம்.பி.
முரசொலி மாறன் எம்.பி.
மேயர் காமாட்சி செயராமன்
காட்டூர் கோபால் எம்.எல்.சி.
லோநாராயணன் எம்.எல்.சி.

மாதவரம்
இலட்சுமணன் எம்.பி.
நீலமேகம் பி.ஏ.பி.எல்.
சா. கணேசன் (முன்னுள் மேயர்)
ம. பொ. வேதாசலம்
மதிவாணன்
எம். கிருட்டிணமூர்த்தி
இரெ. கோவிந்தசாமி

ஆவடி
டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ.
சின்னச்சாமி
வை. பாலசுந்தரம் எம்.எல்.ஏ.
கோபால் எம்.எல்.ஏ.

ஆலந்தூர்
துரைமுருகன் எம்.எல்.ஏ.
டி. சே. பொன்னுவேலு எம்.எல்.சி.
சி. ஆர். கோலப்பா எம்.எல்.சி.
சுப்பிரமணியம், மோகன்ராஜ்

திருவொற்றியூர்
இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ
நாகலிங்கம் எம்.எல்.ஏ.
மா. வெ. நாராயணசாமி எம்.எல்.ஏ
எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ.
வெங்கட்ராமன்,
வெ. பார்த்தசாரதி
இரா. வெள்ளியங்கிரி

செங்கற்பட்டு
சிட்டிபாபு எம்.பி.
கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ.
.ரந்தாமன் எம்.எல்.ஏ.,

[illegible]ளம்
சி. ஆறுமுகம் எம்.எல்.ஏ.
தியாகராசன்

காஞ்சிபுரம்
காஞ்சி கல்யாணசுந்தரம் எம்.பி.
சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ.

குடியேற்றம்
விசுவநாதன் எம்.பி.
ஏ. கு. துரைசாமி எம்.எல்.ஏ.
எஸ். கிருஷ்ணன் எம்.எல்.ஏ.

வேலூர்
தோட்டூர் திருவேங்கடம் எம்.ஏ., எம்.எல்.ஏ.
சின்னராசு எம்.பி.
உலகநம்பி எம்.பி.
மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ.

ஆரணி
முனு ஆதி எம்.எல்.ஏ.
ஏ. சி. நரசிம்மன் எம்.எல்.ஏ.
இராம சுப்பு

அரக்கோணம்
இரா. தர்மலிங்கம் எம்.எல்.சி.
கே. ஏ. கிருட்டினசாமி எம்.ஏ.பி.எல்.
பலராமன் எம்.எல்.ஏ.
அன்புக்கண்ணன்

பாண்டிச்சேரி
டி. வி. நாராயணசாமி
எம். ஏ. சண்முகம் [எம்.எல்.சி.

விக்கிரமசிங்கபுரம்
அந்தோணிசாமி,
வைத்தியலிங்கம், ஆறுமுகம்

அருப்புக்கோட்டை
தங்கபாண்டியன் எம்.எல்.சி.
பி. ஏ. பால்ராஜ்
பி. பி. என். நல்லதம்பி,
வேலுச்சாமி, முத்தையா

பொள்ளாச்சி
மு. இராமநாதன் எம்.எல்.சி.
மோகன்ராஜ் எம்.பி.
ப. கோபால் எம்.எல்.ஏ.
சண்முகசுந்தரம் எம்.எல்.ஏ.
இராமசாமி (நகரமன்றத் தலைவர்)

சிவகாசி
காளிமுத்து எம்.எல்.ஏ.
வே. கருணாகரன், ஆர். கே. துரை
எஸ். பி. மணியன், ஏ. மாரியப்பன்

திருவில்லிபுத்தூர்
ஆண்டி என்கிற குருசாமி எம்.எல்.ஏ.
ஆர். கே. நாராயணன்
கிருட்டினன்

இராசபாளையம்
தா. கிருட்டினன் எம்.ஏ.,பி.எல்., எம்.பி
தம்பித்துரை (தலைவர் மானூர் ஊராட்சி மன்றம்)
திருவேங்கடம் (மின் தொழிலாளர் சங்கம்)
முருகேசன் (கணக்காயர்கள் சங்கம்)
இரா. மா. பொன்னுசாமி

புஞ்சைப்புளியம்பட்டி
சாமிநாதன் எம்.பி.
வெங்கிடு, பு. கா. ஆறுமுகம்
ஆனந்தன் எம்.ஏ.,பி.எல்.

திருவனந்தபுரம்
எம். ஏ. மஜீத், கே. பி. சங்கரதாஸ்

கொல்லம்
எம். பாஸ்கரன் குட்டி, ஏ. கபீர்

பொன்குன்னம்
அகஸ்டின் வருசிமலை
குரியாத்தி கோபாலன்

ஏலப்பாறை
தம்பலக்காடு புருசோத்தமன்
சி. ஏ. தேவஸ்ஸிக் குட்டி

மாம்மனூர்
பி. ஏ. எம். சித்திக், வி. ஐய்யப்பன்

வண்டிப்பெரியார்
எஸ். கே. ஆனந்தன்
எம். எம். உஸ்மான்
எம். ஏ. இராசரத்தினம்

வண்டன்மெட்டு
சே. ஏ. கலையழகன்
என். நடராசன் எம்.ஏ.

மூணாறு
ஜி. சில்வர்ஸ்டார், பி. ஏ. பிரகாஷ்

சாந்தம்பாறை
என். எஸ். கே. எஸ் தாமரைச் செல்வன் எம்.ஏ.
கே. எம். ஜார்ஜ்

திருச்சூர் நகரம்
பி. எஸ். மாத்யூ,
ராகவன் மாம்புள்ளி

பாலக்காடு நகரம்
பி. கொச்சப்பன், எம். ஏ. அப்பாஸ்

சிற்றூர்
எஸ். திருமலைசாமி
பாறை பிரபாகரன்

ஆலத்தூர்
கே. வி. கேரளியன்
கே. பொன்னுசாமி

தளிப்பறம்பு
கே. சி. ஜோசப், பி. சி. செரியன்

கொச்சின்
கே. ஏ. அம்சா
சி. வி. சோமசுந்தரம் பி.ஏ.

ஈரோடு
மா. முத்துசாமி பி.ஏ.பி.டி., எம்.பி.
சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
ஏ. என். சாமி, விசுவநாதன்

ஆப்பக்கூடல்
ஏ. எம். இராசா எம்.எல்.ஏ.
கவுந்தப்பாடி துரை
அமராவதி நகர் பாலு, சாஸ்திரி

வால்பாறை
இரெ. கோவிந்தசாமி
இராமசாமி எம்.எல்.ஏ.
குழந்தைவேலு பி.ஏ.பி.எல்.

உடுமலைப்பேட்டை
பர்வதக்கண்ணன், மணி
ஏ. எஸ். மணி

மேற்கோதையாறு
இரணியல் ரவி, அம்புரோஸ்
வீரமுத்து

கீழ்க்கோதையாறு
மைக்கேல் ராஜ், சஞ்சீவி
வினைதீர்த்தான்

நான்குனேரி
நெல்லை திராவிடமணி
கணபதி எம்.எல்.ஏ.
இலக்குமணன், புல்லையா

பேட்டை
எம். மசுத்தான், உதுமான்

சங்கரன்கோவில்
வெள்ளத்துரை எம்.எல்.ஏ.
ஏ. ஆர். சுப்பையா எம்.எல்.ஏ.
பழனிசாமி (நகர மன்றத் தலைவர்)

தாழையூத்து
எட்மண்ட் எம்.எல்.ஏ.
அ. சந்திரன், முருகு. ஆறுமுகம்

தூத்துக்குடி
கே. ஆர். இராமலிங்கம்
கிருஷ்ணன் [எம்.எல்.ஏ

அருப்புக்கோட்டை
எம். எஸ். சிவசாமி எம்.பி.
தங்கபாண்டியன் எம்.எல்.சி.
பி. பி. எஸ். நல்லதம்பி

குன்னூர்
தூயமணி எம்.எல்.ஏ.
கே. பி. முருகேசன்
எம். மாணிக்கம்
தங்கம் (நகரச் செயலாளர்)

உதகை
மாதா கவுடர் எம்.பி.
தேவராசன் எம்.எல்.ஏ.
இராஜு (வட்டச் செயலாளர்)
செயராமன் (நகரச் செயலாளர்)
அருள் தாஸ்

மதுரை
மேயர் எஸ். முத்து எம்.எல்.சி.
என். வி. என். சோமு பி.ஏ.பி.எல்.
எம். செல்வராசு எம்.எல்.ஏ.
கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.
சுருளிவேல் எம்.எல்.ஏ.
ஏ. கே. சிவசாமி

மேலூர்
சோ. காவேரிமணியன் எம்.எல்.ஏ.
மலைச்சாமி எம்.ஏ., எம்.எல்.ஏ.
ஏ. கே. சிவசாமி

திண்டுக்கல்
இராசாங்கம் எம்.பி., அக்கினிராஜ்
பி. ஏ. விக்கிரமாதித்தராசன்
சேதுராமலிங்கம்
தம்பித்துரை (பெருந் தலைவர் ஊராட்சி ஒன்றியம்)
பொன். சீனிவாசன்
மா. தங்கவேலர், அமுதன்

பழனி
பழனிச்சாமி எம்.எல்.ஏ.
நாச்சிமுத்து எம்.எல்.ஏ.
நாராயணசாமி, துரை அரசு
பாலுச்சாமி, ஜி. எஸ். பதி

தேனி
பழனிவேல்ராசன் பி.ஏ., எம்.எல்.ஏ.
அன்புச்செழியன் பி.ஏ., எம்.எல்.ஏ.
சாமித்துரை

திருமங்கலம்
பி. எஸ். மணியம் பி.ஏ.,பி.எல்., எம்.எல்.ஏ.
கோட்டைச்சாமி (வட்டச்செயலாளர்)

திருநெல்வேலி
சூரியநாராயணன்
பத்மநாபன் எம்.எல்.ஏ.
அழகியநம்பி, இலட்சுமணன்

திருப்பூர்
சின்னசாமி எம்.எல்.ஏ.
துரைசாமி எம்.எல்.ஏ.
முருகேசன், பெரியசாமி

கோயமுத்தூர்
நன்னிலம் நடராசன்
வெ. கண்ணன் (முன்னுள்போலீசு)
எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.எல்.சி.
சி. டி. தண்டபாணி எம்.பி.
கோவை செழியன் எம்.எல்.ஏ.
அரங்கநாதன் எம்.எல்.ஏ.
பி. பெரியசாமி, கருப்புசாமி

பெரியநாய்க்கன்பாளையம்
மாணிக்கவாசகம் எம்.எல்.ஏ.
தெ. கு. மெய்யப்பன்
அய்யாசாமி, காட்டூர் தேவராசு

காரமடை
சுப்பையன் பி.ஏ.பி.எல்.
மு. கோவிந்தராசன்
பல்லடம் பார்த்தசாரதி

மேட்டுப்பாளையம்
கருணாநாதன் எம்.எல்.ஏ.
அரங்கநாயகம் பி.ஏ.பி.எல்.
இரசாக், இராமசாமி

தஞ்சாவூர்
ஜி. பராங்குசம் எம்.எல்.சி.
எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி.
எஸ். நடராசன் எம்.எல்.ஏ.
துரை கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
தஞ்சை இறைவன்

கும்பகோணம்
ப. நாராயணசாமி எம்.எல்.சி.
இரா. செழியன் எம்.பி.
வி. எஸ். கோவிந்தராசன்
ந. கணபதி எம்.எல்.ஏ.
துறவி எம்.எல்.ஏ.
சிம்சன் பாலசுப்பிரமணியம்
கோ. வெங்கடாசலம்

மாயவரம்
சே. சுப்ரவேலு எம்.பி.
என். கிட்டப்பா எம்.எல்.ஏ.
தம்பி தேவேந்திரன் எம்.எல்.ஏ.
ஜோசப், செங்குட்டுவன்

திருவாரூர்
எல். கணேசன் எம்.எல்.ஏ.
தாழை மு. கருணாநிதி எம்.எல்.ஏ.

நாகப்பட்டினம்
திருச்சி நாகசுந்தரம்
இராசமாணிக்கம் எம்.எல்.ஏ.
குடந்தை சு. பத்மநாபன்
சந்தானம் (வட்டச் செயலாளர்)

பொறையார்
குடந்தை எஸ்.ஆர். இராதா எம்.சி.
டி. வி. சம்பத் எம்.எல்.ஏ.
விளநகர் கணேசன் எம்.எல்.ஏ.

திருச்சி
கோ. சி. மணி எம்.எல்.சி.
துரைராஜ் எம்.பி.
என். நல்லுசாமி பி.ஏ.பி.எல்.
வி. கிருட்டிணமூர்த்தி எம்.எல்.ஏ.
எஸ். ஏ. ஜி. இராபி, மு. நடராசன்

மணப்பாறை
எம். கந்தசாமி எம்.எல்.ஏ.
வெங்குசாமி, ஆண்டியப்பன்
சங்கரன்

புதுக்கோட்டை
கே. வீரையா எம்.பி.
காடுவெட்டி தியாகராசன் எம்.எல்.ஏ., எம். எஸ். மணி
எஸ். ஜி. கிருட்டினன்
குளித்தலை முத்துக்கிருட்டினன்
காளிராசன், மஜீத்

புகலூர்
என். கே. காந்தி, டி. பி. மூர்த்தி
இராமசாமி

கரூர்
எஸ். நல்லசாமி எம்.எல்.ஏ.
பரமத்தி சண்முகம்
கல்லக்குடி தம்புசாமி
மல்லையன், சின்னதம்பி

தருமபுரி
எச். எல். முருகேசன்
எம். வி. கரிவேங்கடம் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.

மேட்டூர் அணை
மு. பரமசிவம் எம்.எல்.ஏ.
அ. பாலு
வி. கன்னியப்பன் பி.ஏ.பி.எல்.
கோவை வெள்ளிங்கிரி
ஏ. இராமலிங்கம்
புலவர் பீர் முகமது
க. கு. சின்னசாமி, வில்சன்
ஏ. ஆறுமுகம்
ஆர். கோவிந்தன் பி.ஏ.பி.எல்.

பள்ளிப்பாளையம்
செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.
என். நடேசன் (வட்டச் செயலாளர்)
டி. பி. நடேசன்

சேலம்
ஈ. ஆர். கிருட்டிணன் எம்.பி.
ஜெயராமன் பி.ஏ., எம்.எல்.ஏ.,
சி. பழனியப்பன் (நகர் மன்றத் தலைவர்)
எச். ஆர். விஜயன்
பொன்னுமலை எம்.எல்.ஏ.

தாராபுரம்
பழனிபம்மாள் எம்.எல்.ஏ.
நா. பழனிசாமி பி.எஸ்சி., எம்.எல்.ஏ.

கோபி
ஜி. என். இராசு
டாக்டர் எஸ். எம். பழனியப்பன்
வெங்கிடு [எம்.எல்.ஏ.
எஸ். கே. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.

தென்காசி
கே. எம். கதிரவன் எம்.எல்.ஏ.

வடலூர்
வி. கிருட்டிணமூர்த்தி எம்.எல்.ஏ.
என். இராசாங்கம் எம்.எல்.ஏ.
வி. வி. சாமிநாதன் (சிதம்பரம்)

கடலூர்
ஆர். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
கி. கோவிந்தராசன்
கி. தண்டபாணி
கே. ஜி. சுவாமிநாதன்

சிதம்பரம்
பொன். சொக்கலிங்கம் எம்.எல்.ஏ.
வி. மாயவன் எம்.பி.
துரைராசு (நகர்மன்றத் தலைவர்)
தி. ப. மணி, சக்கரவர்த்தி
கோவிந்தராசன் (நகர செயலாளர்)

விருத்தாசலம்
கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல்.,
வி. எஸ். மணி [எம்.எல்.ஏ.
டி. இராசவேல், புரு. பத்மநாபன்
டி.எஸ்.முருகேசன் எம்.ஏ.பி.எல்.
டி. பிச்சமுத்து

பெண்ணாடம்
புலவர் அறிவுடைநம்பி எம்.எல்.சி.
வி. இராமசாமி எம்.எல்.சி.
செபமாலை எம்.எல்.ஏ.
ஆர். இலக்குமணன், விசுவநாதன்
கபாலி, தியாகராசன் பி.எஸ்சி.
கே. இராமலிங்கம் பி.ஏ.பி.எல்.
இராமச்சந்திரன் பி.ஏ.பி.எல்.

(4-ம் பக்கம் பார்க்க)

‘மெத்தனமாக இருந்துவிடக் கூடாது’

‘நாட்டை எதிர்நோக்கி சிக்கலான பிரச்னைகள் உள்ளன’

மக்களுக்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 18—

“வங்காள தேச விடுதலைப் போராட்டத்தின் வெற்றி இராணுவ பலத்தின் வெற்றி மட்டும் அல்ல — சனநாயகம், மதச் சார்பின்மை, சோஷலிசம் ஆகிய இலட்சியங்களின் வெற்றியாகும்.

“மேற்குப் போர் முனையில் என்ன நடந்தாலும் வரவிருக்கும் திங்களில் புதிய சிக்கலான பிரச்சினைகள் ஏற்படும்.

‘நாடு மெத்தனமாக இருக்கக்கூடாது; நமது தேசிய ஒருமைமையையும் — நமது நலன்களையும் — நமது அடிப்படை நம்பிக்கைகளையும் பாது காக்க நாம் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும்.

“வங்காள தேசத்தின் தனித் தன்மையை நிலை நாட்ட வேண்டும் என்ற உணர்வும் — தீவிர சுதந்தர ஆர்வமும் இருந்ததால்தான், வங்காள தேச விடுதலைப் படையினர் (முக்தி வாகினி) இவ்வளவு துணிச்சலுடன் போராடினர்! அவர்களுடைய உணர்ச்சிகளின் நியாயத் தன்மையை உணர்ந்ததால்தான், இந்திய வீரர்கள் இவ்வளவு தீவிரமாகவும் — அஞ்சாமையுடனும் போராடினார்கள்!

“பாகிஸ்தான் மக்களிடம் நமக்கு விரோதம் இல்லை என்று உறுதி கூற விரும்புகிறோம்; இரு நாட்டு மக்களையும் பிரிக்கின்ற அம்சங்களை விட இடையே உள்ள பொதுவான அம்சங்கள் நிறைய உள்ளன; பாகிஸ்தான் மக்கள் அவர்களது நாட்டின் நாயகர்களாக வாழட்டும்! அந்நாட்டின் ஏற்றத்தாழ்வுகளையும் — ஏழ்மையையும் அகற்றுவதில் தங்களது சக்தியை அவர்கள் செலவிடட்டும்!

“சனநாயகம் — மதச் சார்பின்மை — சோஷலிசம் ஆகியவை நமது கொள்கைகள்; எதிர் மறையான கொள்கைகளைக் கொண்டோ அல்லது எல்லா மக்களுக்கும் பொதுவாக இல்லாத கொள்கைகளைக் கொண்டோ எந்த நாட்டையும் உருவாக்க முடியாது என்பது நம் நம்பிக்கையாகும்.

“துரதிருஷ்டவசமாக, ‘இந்தியாவின்மீது வெறுப்பு’ என்ற அடிப்படையில், பாகிஸ்தான் தனது கொள்கைகளை வகுத்துக்கொண்டு வந்திருக்கிறது; சென்ற 24 ஆண்டுகளாக நமக்கு எதிரான பொய்ப் பிரச்சாரம் — ஏசல் — ஆக்கிரமிப்பு ஆகியவற்றை எதிரொலிக்கும் பல உரைகளை நாம் கேட்டுவந்திருக்கிறோம்; ‘பாகிஸ்தான் மக்களின் உண்மையான குரல் இது’ என்று நம்மால் நம்ப இயலாது! பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் அனைவரும் அம்மக்களை எதுமறியாத நிலையில் வைத்து வந்திருக்கிறார்கள்!

“சிரமம்மிக்க இந்த நேரத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்ததற்காக எல்லா அரசியல் கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.”

—தலைமையமைச்சர் இந்திரா காந்தி
(நாடாளுமன்றத்தில்)

தாயகத்துக்காக இன்னுயிர் ஈந்த வீரர்களை வணங்குவோம்!

நம் இதயத்தையே அந்தக் குடும்பத்தின் பக்கம் ஒப்படைப்போம்!

சென்னை, டிச. 18—

“தமிழ்நாட்டுக்குப் போர் வராவிட்டாலும், ‘தமிழ்நாடும் போர் முனையில் இருக்கிறது’ என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

“இன்றைக்குத் தமிழ்நாட்டு வீரர்கள் சிலர், ஏன் — ‘பலர்’ என்று கூடச் சொல்லலாம — இந்தப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிரை தந்திருக்கிறார்கள்! அவர்கள் அணிந்திருந்த இராணுவ உடைகள் அவர்களுடைய வீட்டிற்குத் திரும்ப அனுப்பப்பட்டிருக்கின்றன; அந்த இராணுவ உடைகளைக் கண்ணீரால் நனைத்து — அவைகளைத் தம் அருமந்தச் செல்வன் நினைவாக — வீட்டுத் தலைவனின் நினைவாகப் பேழையில் வைத்துப் பூட்டி — மலர்கொண்டு பூஜித்துக்கொண்டு இருக்கின்ற வீட்டுத் தாய்மார்கள், நம் அனுசரணைக்கும் — ஆதரவுக்கும் உரியவர்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது!

“போர், வெற்றியைக் கொடுக்கும்; ஆனால், போருக்குப் பின் ஏற்படுகின்ற விளைவுகளை நாடு சமாளித்துத் தீரவேண்டும்; அப்படிச் சமாளிக்கின்ற ஆற்றலை நாம் அனைவரும் பெற்றிருக்கின்றோம்!

“நம்முடைய மன்றத்தில் கட்சித் தலைவர்கள் அனைவரும் எடுத்துக் காட்டியதுபோல், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அந்தக் கடமை உண்டு; இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு!

“அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்ததும், மாவட்ட அதிகாரிகள் மூலமாகத் தகவல் அந்தந்த இடங்களுக்குத் தரப்படுகிறது; ‘அதிகாரிகள் அந்த வீட்டாருக்கு ஆறுதல் கூறுவதற்குமுன், ஆங்காங்கே உள்ள மக்கள் பிரதிநிதிகள் — ஊராட்சிமன்றத் தலைவர்கள் — உறுப்பினர்கள் — ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் — ஒன்றியத் தலைவர்கள் — சட்டமன்ற உறுப்பினர்கள் — நாடாளுமன்ற உறுப்பினர்கள் — மேலவை உறுப்பினர்கள் சென்றார்கள்’ என்று சொல்லுகின்ற அளவுக்குச் சில இடங்களில் — கூடுமானால், ‘அமைச்சர்களேகூட அந்த இல்லங்களுக்குச் சென்றார்கள் — ஆறுதல் சொன்னார்கள்’ என்ற அளவில் அதிகாரிகளை முந்திக்கொண்டு நாம் நின்றால்தான், ‘நம் மகன், இந்த மானப் போர்க்களத்தில் மடிந்துவிட்டாலும், அந்த மகனுக்குப் பதிலாக — இதோ — இன்னொரு மகன் இருக்கிறான்’ என்று அந்தத் தாய்மார்கள் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைவார்கள்; நம் தாய்த் திருநாடு எழுச்சியினைப் பெறமுடியும்!

“நம்முடைய நாடு புறநானூற்றுப் புகழ்கொண்ட நாடு! புறநானூற்றுத் தாய்மார்கள் வாழ்ந்த நாடு — நம் தமிழ்நாடு! இங்கே வீரத்திற்குப் பஞ்சம் இல்லை! மானத்தை நிலைநாட்ட மறவர்கள் போர்க் களத்தில் தங்கள் இன்னுயிரைப் பலிகொடுப்பது என்பது — நம் நாட்டைப் பொறுத்தவரையில் — புதிதல்ல!

“வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்
எங்கள் வெற்றித் தோள்கள் —
வெங்குருதிதனில் கமழ்ந்து வீரம் செய்கின்ற மூச்சு
எங்கள் மூச்சாம்!”

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதற்கு ஏற்ப, ஆற்றல் மறவர்கள் நிறைந்த நாடு — நம் தமிழ் மாநிலம்!

“ஆகவே, அந்தத் தமிழ்ப் பெருமக்கள் இந்தப் போராட்டத்தில் வெற்றியினைத் தேடித்தர தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள் — அங்கங்களை அறுத்துக் கொடுத்திருக்கிறார்கள் — கால் கைகளை இழந்து பச்சை இரத்தத்தைப் பரிமாறியிருக்கிறார்கள்! அப்படிப்பட்ட வீர மறவர்களுக்கு இப்பேரவையின் வணக்கத்தைச் சொல்வதன்மூலம் நாம் நம்முடைய மதிப்பை உயர்த்திக் கொள்கிறோம் என்றால் மிகையாகாது!

“அப்படிப்பட்ட வீரர்களுக்கு இப்போதுகூட இந்த அரசு சில விருதுகளையும் — அந்த விருதுகளுக்கு ஏற்ப பண முடிப்புக்களையும் தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது; ‘அது போதாது’ என்றாலும், நம்மால் முடிந்ததைச் செய்கிறோம்! நம்முடைய இதயத்தை அந்தக் குடும்பத்தின் பக்கம் ஒப்படைக்கிறோம்!”

—முதலமைச்சர் கலைஞர்
(சட்டப் பேரவையில்)

மாவட்டப் போலீசு அதிகாரியும் — மாஜிஸ்திரேட்டும் தலைமறைவு

தோற்ற எதிரிப் படைகளுடன் ஓடிவிட்டனராம்

ஜெஸ்சூர் நகரில் சிவில் நிர்வாகம் துவக்கம்

ஜெஸ்ஸூர், டிச. 18—

பாகிஸ்தான் துருப்புக்கள் நடத்திய கொடுமையின் அதிர்ச்சியிலிருந்து இந்நகர மக்கள் மெதுவாக விடுபட்டுவருகிறார்கள்.

இங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் அதிகாரிகளுக்கு, இந்திய இராணுவத்தினர் மிகவும் உதவி வருகிறார்கள்.

மின்சார—தொலைபேசித் தொடர்புகள் சீர்செய்யப்பட்டுவிட்டன.

மாவட்ட மாஜிஸ்திரேட்டும் — மாவட்டப் போலீசு அதிகாரியும் தவிர அனைத்து அதிகாரிகளும் வேலைக்குத் திரும்பியிருக்கின்றனர்; இவர்கள் இருவரும் தோல்வியடைந்த இராணுவத்தினருடன் சென்றுவிட்டனர் என்று கருதப்படுகிறது.

சட்டம் — ஒழுங்கை நிலை நிறுத்தப் போலீசுக்கு விடுதலைப் படை உதவி செய்துவருகிறது.

இராணுவத்தினருக்கு உதவியாக இருந்த பலரும் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது; ஆயினும், ரசாக்கர்கள் என்று கூறப்படும் கொடுமைக்காரர்கள் பலரும் பிடிக்கப்பட்டுள்ளனர். பலர் அவர்களாகவே சரணடைந்துவிட்டனர்.

உலக நாடுகளின் கண் திறக்குமா?

சென்னை, டிச. 18—

“முதலிலே இந்தியாவின் மீது போர் தொடுத்தது பாகிஸ்தான்; ஆக, போர் தொடுத்ததில் முந்திக்கொண்டது பாகிஸ்தான்!

“ஆனால் இன்றைக்கு, ‘போர் நிறுத்தம் செய்கிறோம்’ என்பதில் முந்திக் கொண்டிருப்பது இந்தியா!

“இதை மனத்தில்கொண்டு — உலக நாடுகளில் சில நாடுகள் — தாங்கள் எடுத்த அநியாயமான முடிவுகளிலிருந்து தங்களை மாற்றிக்கொள்ளாவிட்டால், இந்தியா அவர்களுக்குக் கட்டாயம் மேலும் புதிய தரத் தக்க அளவுக்குப் பாடத்தைப் புகட்டும் என்பதில் அஞ்சிற்றும் சந்தேகம் இல்லை!”

—முதலமைச்சர் கலைஞர்
(சட்டப்பேரவையில்)

வருந்துகிறோம்

சென்னை மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளரும் — மாநகராட்சிமன்ற உறுப்பினருமான திரு. கே. எம். கண்ணபிரான் அவர்களின் சிறிய தந்தையார் திரு. கா. மு. பவளப்பனார் அவர்கள் 14—12—71 அன்று கல்வாய் கண்டிகை கிராமத்தில் இயற்கையெய்தினர்; மறுநாள் உடல் எரியூட்டப்பட்டது.

சிறிய தந்தையாரை இழந்து துயருறும் திரு. கண்ணபிரான் அவர்களும் — அவரது குடும்பத்தாருக்கும் சென்னை 5-வது வட்ட தி. மு. க. சார்பில் இரங்கலும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

வங்க தேச எல்லை

பாகிஸ்தானைவிட நீண்டது

புதுடில்லி, டிச. 18—

இந்தியா—வங்க தேசம் பொது எல்லை, இந்தியா — பாகிஸ்தான் எல்லையைவிட நீண்டதாகும்.

வங்க தேச எல்லை 3,950, கிலோமீட்டரும், பாகிஸ்தான் எல்லை 2,966 கிலோமீட்டரும் ஆகும்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நெல்லிக்குப்பம்

ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ.
ஏ. வி. தண்டபாணி
பாலவேலாயுதம், கலியபெருமாள்

கள்ளக்குறிச்சி

தெய்வீகன் எம்.பி.
குப்புசாமி (இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்)
டி. கேசவலு எம்.எல்.ஏ.
நாச்சியப்பன் எம்.எல்.ஏ.
என். தர்மலிங்கம் எம்.எல்.ஏ.
இராமகிருட்டினன்
மாரியப்பன் (வட்டச் செயலாளர்)
கரீம் (நகரச் செயலாளர்)
நடராசன் (செயலாளர், முன்னேற்றச் சங்கம்)

பெங்களூர்

துரை பிரதாப் சந்திரன்
சந்திரன், கோபால, முத்துராஜ்,
ஜெகன்னாத ராவ்

அந்தமான் — நிக்கோபார் தீவுகள்

து. க. கோபால், மருதவாணன்,
குப்புசாமி, எம். காதர்,
பாண்டியன், ஜெகன்னாதன்

குறிப்பு :—ஏற்கனவே அறிவித்துள்ள பட்டியலின்படி, நாடாளுமன்ற — சட்டமன்ற — மேலவை உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தொழிற்சங்க நிர்வாகிகள் ஆகியோர் அந்தந்த இடங்களில் நடைபெறுகின்ற ஊர்வலங்கள் — பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றில் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

டாட்டா — பிர்லாக்கள் தாராளம்

பம்பாய், டிச. 18—

டாட்டா குழுவைச் சேர்ந்த 9 நிறுவனங்கள் நாட்டுப் பாதுகாப்பு நிதிக்காக ரூ. 45 இலட்சம் அளித்திருக்கின்றன.

இதுபோல் பிர்லா நிறுவனங்களின் சார்பில் பாதுகாப்பு நிதிக்கு ரூ. 23 இலட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது.

நியூயார்க், டிச. 18—

ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்றிரவு கூடியது; அதுபோது, இந்தியா — பாகிஸ்தான் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதை தள்ளிப்போட்டுவிட்டு, ஐ. நா. பொதுச்செயலாளர் தேர்வு குறித்துத் தனது கவனத்தைச் செலுத்தியது.

இந்திரா காந்திக்கு தி. மு. க. பாராட்டு

பொதுச்செயலாளர் நாவலர் செய்தி

சென்னை, டிச. 18—

தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு தி. மு. கழகப் பொதுச்செயலாளர் — கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு :—

“வங்காள தேச வெற்றி இந்தியா போற்றிக் காப்பாற்றிவரும் சனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் வெற்றியாகும்.

“இந்தியாவின் பழம்பெரும் புகழையும் — பெருமையையும் காப்பாற்றுகின்ற வகையில் வங்காள தேச வெற்றிக்குத் தலைமை தாங்கிய தங்களுக்குத் தி. மு. கழகச் சார்பில் வெற்றி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

‘வீரத்துடனும் — முயற்சியுடனும் போரிட்டு இந்தியாவின் மானத்தையும் — புகழையும் காப்பாற்றிய போர்ப் படை வீரர்களுக்குத் தங்களின் மூலமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.”

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (3[illegible], [illegible] தெரு, சென்னை-1[illegible]) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.